## பாகம் II

## 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் பாகம் XI ஐ திருத்துதல்

*2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கச் சட்டத்தின் 40 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3**. (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் 40 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

''(1) (இதனகத்துப்பின்னர் ''வரி'' எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்) ''காபன் வரி'' என அழைக்கப்பட வேண்டியதுமான வரியொன்று இதற்கான மூன்றாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு மோட்டார் வாகனத்தினதும் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரிடமிருந்து, அவ்வட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில், 2019, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்றதும் அத்துடன் 2019, நவெம்பர் 30 ஆந் தேதியன்று முடிவடை கின்றதுமான காலப்பகுதிக்காக அறவிடப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இவ்வுட்பிரிவின் கீழ் செலுத்தப்படற்பாலதான வரியானது, (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் நியதிகளின்படி, 2019, சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்குகின்றதும் அத்துடன் 2019, நவெம்பர் 30 ஆந் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியினுள் முதற் தடவையாகப் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனம் தொடர்பில் அறவிடப்படலாகாது.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவு அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

''(1) நாற்பதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செலுத்தப் படற்பாலதான வரியானது வருடாந்தப் பதிவு புதுப்பிக்கப் படுவதற்கு உரிய தேதியன்று அல்லது அதற்குமுன்னர், பிரதேச செயலாளருக்கு, ஏதேனும் இயைபான மோட்டார் வாகனத்தின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரினால் செலுத்தப்படுதல் வேண்டும்.''.

## பாகம் III

## 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் பாகம் XII ஐ திருத்துதல்

*2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 46 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**5**. இரண்டாயிரத்து பதினெட்டாம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் 46 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது:-

*“தவணை தவறுகையிலுள்ள அறவீட்டை அறவிடுதல்.*

46. (1) அறவீட்டுத் தொகை அல்லது அதன் பாகம் தவணைதவறுகையிலுள்ளவிடத்து, தவணை தவறியவர், தவணைதவறிய அறவீட்டுடன் சேர்த்து மேலதிகமாக,-

(அ) 44 ஆம் பிரிவின்கீழ் அறவீட்டின் செலுத்துகைக்கான உரிய தேதியிலிருந்து, அடுத்துப்பின்னரான ஒருமாத காலப் பகுதிக்கு அல்லது அதன் பாகத்துக்குத் தவணைதவறுகையிலுள்ளவாறான அத்தகைய அறவீட்டுத் தொகையின் பத்துசதவீதத்திலும்; அத்துடன்

(ஆ) பந்தி (அ)வில் குறித்துரைக்கப்பட்ட செலுத்துகைக்கான உரிய தேதியிலிருந்து, அடுத்துப்பின்னரான ஒருமாத காலப்பகுதிக்கு அல்லது அதன் பாகத்துக்கு தவணைதவறுகையிலுள்ளவாறான அத்தகைய அறவீட்டுத் தொகையின் இரண்டு சதவீதத்திலும், கணக்கிடப்பட்ட மிகைக் கட்டணமொன்றை ஆணைக்குழுவுக்குச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்; அம்மிகைக் கட்டணம் ஆணைக்குழுவினால் சேகரிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, மூன்று மாதங்களுக்கு மேற்பட்டவொரு காலப்பகுதிக்கு தவணை தவறுகையிலுள்ள ஏதேனும் அறவீட்டை, அதன்மீது திரண்ட மிகைக்கட்டணத் தொகையுடன் சேர்த்து, இதன்பின்னர் குறித்துரைக்கப்படக்கூடியவாறான முறையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(3) அறிவித்தலொன்று வழங்கப்பட்ட திகதி யிலிருந்து மூன்று வாரங்களைக்கொண்ட காலப் பகுதியொன்றினுள் அத்தகைய அறவீடும் அதன் மீதான மிகைக்கட்டணமும் செலுத்தப்பட்டாலொழிய இப்பிரிவின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி தவணை தவறுகையிலுள்ள அறவீட்டுத் தொகையையும் அதன்மீது திரண்ட மிகைக் கட்டணத்தையும் அறவிடுவதற்கான வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற்கு ஆணைக் குழுவுக்குள்ள உட்கருத்துப் பற்றி தவணை தவறியவருக்கு அறிவிக்கின்ற அத்தகைய அறிவித்தலை ஆணைக்குழுவானது தவணை தவறியவருக்கு வழங்கச் செய்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவானது (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி தவணைதவறியவருக்கு அறிவித்தலை வழங்குமிடத்தும் ஆனால் தவணைதவறுகையிலுள்ள அறவீட்டுத்தொகையும் அதன்மீதான மிகைக்கட்டணமும் அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட மூன்று வாரங்களைக்கொண்ட காலப்பகுதி கழிந்துள்ள போதிலும் செலுத்தப்படாதுள்ளவிடத்தும், ஆணைக்குழுவானது, தவிசாளரின் கைப்பட, தவணைதவறியவர் எந்தப் பிரிவில் வதிகின்றாரோ அல்லது தொழில் கொண்டுநடாத்துகின்றாரோ அந்தப் பிரிவின்மீது நியாயாதிக்கங்கொண்டுள்ள

நீதிவானுக்கு, தவணைதவறியவரின் பெயரையும் முகவரியையும் தவணைதவறுகையிலுள்ள மொத்தப் பணத்தொகையையும் அவ்வாறு பெயர்குறிப்பிடப் பட்ட ஆள் இப்பிரிவினால் தேவைப்படுத்தப் பட்டவாறாகச் செலுத்துகையைச் செய்வதில் தவணை தவறியுள்ளாரென்ற பொருள்பட்ட கூற்றொன்றையும் கொண்டுள்ள சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும். தவணைதவறியவர் ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக, நிறுவன மொன்றாக அல்லது நிறுவனமொன்று தவிர்ந்த கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாகவிருக்கு மிடத்து, அச்சான்றிதழானது, அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முகாமை மற்றும் கட்டுப்பாட்டிற்கு பொறுப்பாக ஒவ்வொரு பணிப்பாளர் அல்லது அலுவலர் அல்லது அத்தகைய நிறுவனத்தின் ஒவ்வொரு பங்காளர் அல்லது அத்தகைய கூட்டிணைக்கப்படாத குழுவின் முகாமை மற்றும் கட்டுப்பாட்டுக்குப் பொறுப்பான ஒவ்வொரு அலுவலரினதும் பெயர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) நீதிவானானவர், (4) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழைப் பெற்றதன்மீது, குறித்துரைக்கப்படவேண்டியவொரு திகதியன்று தம்முன்னர் தோன்றி, அத்தகைய சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட தொகையை அத்தகைய தவணை தவறியவரிடமிருந்து ஏன் அறவிடக்கூடாது என்பதற்கு காரணங்காட்டும்படியும் தவணை தவறியவரை தேவைப்படுத்துகின்ற அழைப்புக் கட்டளையை அத்தகைய தவணை தவறியவர்களுக்கு வழங்குதல் வேண்டும். காட்டப்பட்ட காரணம், செலுத்தாமைக்கான காரணத்தை விளக்கும் வகையில் போதியதற்றதாகவுள்ளதென

நீதிவானுக்குத் தோன்றுமிடத்து நீதிவானானவர், அதனைப் பதிந்ததன்பின்னர், அத்தகைய சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட தொகையை அவை நீதிவானினால் விதிக்கப்பட்ட குற்றப் பணமொன்று என்றாற்போன்று தவணை தவறியவரிடமிருந்து அறவிடுவதற்காக கட்டளை ஆக்குதல் வேண்டும். அவ்வாறு அறவிடப்பட்ட பணம் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படுதல் வேண்டுமென்பதுடன் அதனை திரட்டுநிதியத்துக்கு வரவுவைத்தலும் வேண்டும்.

பாகம் IV

**வெளிநாட்டு வர்த்தகக் கொடுக்கல்வாங்கல்களின்மீது அறவீடொன்றை விதித்தல்**

**6.** (1) இச்சட்டத்தின் இப்பாகம், (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறானதுமான அத்தகைய தேதியன்று நடைமுறைக்குவருதல் வேண்டும்.

இப்பாகம் நடைமுறைக்கு வரும் தேதி.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான கட்டளையானது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பிந்தாமல் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்கு அதன்முன்னர் இடப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான அங்கீகார தேதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**7.** (1) நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன்பின்னரும் இலங்கைக்கு வெளியேயுள்ள ஆளொருவருடன், இலங்கைக்கு வெளியே அத்தகைய ஆளிடமிருந்து எவையேனும் பண்டங்களை அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்வதற்குக் கொடுப்பனவு

வெளிநாட்டு வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களின் மீது அறவீடு ஒன்றை விதித்தல்.

